From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 81 /2016

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Halibullah | Father/Husband Name | : Hameed |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 10.04.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் மேலூரில் குடியிருக்கிறேன். பழைய இரும்பு வியாபாரம் செய்கிறேன். எதிரியை தெரியும். 01.01.16ம் தேதி மதியம் 12.00 மணிக்கு சிவகங்கை பை பாஸ் ரோட்டில் முக்ரி என்பவரின் இடத்தில் சம்பவம் நடந்தது. நான் என் கடையில் இருக்கும்போது எனது நண்பர் முக்ரி போனில் தொடர்பு கொண்டு அவருடைய இடத்திற்கு போகுமாறு சொன்னார். நானும் என் நண்பர் கமால்மைதீன், இப்ராஹிம் ஆகியோருடன் சம்பவ இடம் சென்று பார்த்தோம். அங்கு விஜயகுமாரும் மேலும் 10 நபர்கள் முக்ரி என்பவரின் இடத்தில் கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் விஜயகுமாரிடம் ஏன் முக்ரி என்பவரின் இடத்தில் கொட்டகை போடுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் நீ எதற்கு கேட்கிறாய் என்று சொல்லி தாயோலி என்று கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசினார். அதற்கு நான் அனாவசியமாக பேசக் கூடாது என்று சொன்னேன். அப்போது எதிரி கொட்டகை போட வைத்திருந்த கடப்பாறை, அரிவாள் ஆகியவற்றை காட்டி ஓடிப்போய்விடு இல்லையென்றால் கொல்லாமல் விடமாட்டேன் என்று விரட்டினார். இரண்டு வாகனத்தில் சென்றிருந்த நாங்கள் ஒரு வாகனத்தை விட்டுவிட்டு மற்றொரு வாகனத்தில் காவல்நிலையம் சென்றோம். எதிரி விரட்டியதால் ஒரு வாகனத்தை விட்டுவிட்டு சென்றோம். போலீசில் நான் தான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார்தான். அந்த புகார் மனு அ.சா.ஆ,1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 81 /2016

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Kamalmaideen | Father/Husband Name | : Nahoor Pitchai |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 10.04.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் மேலூரில் குடியிருக்கிறேன். ரியல் எஸ்டேட் வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியும் .எதிரியை தெரியும். 01.01.2016ந் தேதி பகல் 12ல் இருந்து 1.00 மணிக்குள் மலம்பட்டி பை பாஸ் அருகில் முக்ரி என்பவர் இடத்தில் கொட்டகை போடுவதாக முக்ரி என்பவர் போன் மூலம் தகவல் கொடுத்தார். நானும் கலிபுல்லா மற்றும் இப்ராஹிம் ஆகியோர் சம்பவ இடம் சென்று பார்த்தபோது எதிரி 10 நபர்களுடன் கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார். நாங்கள் விஜயகுமாரிடம் சென்று ஏன் இந்த இடத்தில் கொட்டகை போடுகிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு எதிரி அசிங்கமான கெட்டவார்த்தையால் பேசி இங்கே வரக்கூடாது. அரிவாள் கடப்பாறை மற்றும் மண்வெட்டி ஆகியவற்றை காட்டி உள்ளே வந்தால் வெட்டிவிடுவேன் என்று சொல்லி விரட்டிக்கொண்டு வந்தார். நாங்கள் பயந்து ஓடிவந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 81 /2016

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Ibrahim | Father/Husband Name | : Abdul Alim Siddiq |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 10.04.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் மேலூரில் குடியிருக்கிறேன். மாவு மில் வைத்திருக்கிறேன். அ.சா.1 ஐ தெரியும். எதிரியை தெரியும். 01.01.16ம் தேதி மதியம் 12.00 மணியளவில் என் கடைக்கு பக்கத்தில் கலிபுல்லா மற்றும் கமால்மைதீனுடன் நான் பேசிக்கொண்டிருந்தபோது கலிபுல்லா என்பவருக்கு முக்ரி என்பவர் போன் செய்து, அவருடைய இடத்தில் யாரோ கொட்டகை போடுவதாகவும் அதை சென்று பார்க்குமாறும் கூறினார். நான் கலிபுல்லா மற்றும் கமால்மைதீன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது விஜயகுமார் என்பவர் 10 நபர்களுடன் முக்ரி என்பவரின் இடத்தில் கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார். அவரிடம் சென்று ஏன் முக்ரி இடத்தில் செட் போடுகிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு எதிரி எங்களை அசிங்கமாக திட்டி, கொட்டகை போட வைத்திருந்த கடப்பாறை அரிவாள் ஆகியவற்றை வைத்து தாக்க வந்தார். நாங்கள் பயந்து அங்கிருந்து ஓடி வந்து காவல் நிலையம் சென்றோம். கலிபுல்லா புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

விஜயகுமார் கடப்பாறை அரிவாளை வைத்து தாக்க வந்தார். வேறு ஆயுதத்தால் தாக்க வந்தாரா என்றால் பதற்றத்தில் ஓடி வந்தோம்.

மறு விசாரணை:

இல்லை.

From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 81 /2016

Deposition of witness for: PW - 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Alagupandi | Father/Husband Name | : | Ravi |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |
| Date | : | 10.04.18 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சொக்கம்பட்டியில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக மலம்பட்டி செல்லும் வழியில் உள்ள பை பாஸ் ரோட்டில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும் இளங்கோவன் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 81 /2016

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Ilangovan | Father/Husband Name | : Rasu |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 10.04.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் சொக்கம்பட்டியில் வசிக்கிறேன். ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக சம்பவ இடத்தில் போலீசார் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், சாட்சி அழகுபாண்டி என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELU

C.C.No. 81 /2016

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : Kalaiselvi | Father/Husband Name | : Arunachalam |
| Caste | : | Calling | : S.I. |
| Religion | : | Age | : |
| Date | : 15.10.18 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2018.

முதல் விசாரணை:

நான் தற்போது மேலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 02.01.16ம் தேதி 02.15 மணிக்கு மேலூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது கலிபுல்லா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைப்பெற்று நிலைய குற்ற எண். 04/16 இதச பிரிவுகள் 147, 148, 447, 294(பி), 506(2)-ன்கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டு இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். அதன் ஒரு நகலை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் அழகுபாண்டி மற்றும் இளங்கோவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான கலிபுல்லா, கமால்மைதீன், இப்ராஹிம், அழகுபாண்டி மற்றும் இளங்கோவன் ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் 03.01.16ம் தேதி 15.30 மணிக்கு மேலூர் பஸ் நிலையத்திற்கு முன்புள்ள ஆட்டோ நிறுத்தத்திற்கு அருகில் வைத்து எதிரி விஜயகுமார் என்பவரை காரணம்கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 04.03.16ம் தேதியன்று சட்டப்பிரிவுகளை 447, 294(பி), 506(2) இதசவாக மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்தேன். அது அ.சா.ஆ.5 ஆகும். அன்றைய தினமே வழக்கு விசாரணைமுடித்து எதிரியின்மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை: சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.